# Q3 FY2022ல் PAT 94% மற்றும் EBITDA 36% அதிகரித்து வலுவான செயல்திறனுடன் டி.சி.ஐ

சென்னை, ஜன. 31: இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலி மற்றும் லாஜிஸ்டிக்ஸ் தீர்வு வழங்குநரான டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (("TCI"), டிசம்பர் 31, 2021இல் முடிவடையும் மூன்றாவது காலாண்டிற்கான அதன் நிதிநிலை முடிவுகளை அறிவித்தது. ஸ்டேண்ட் அலோன் செயல்திறனின் சிறப்பம்சங்கள்: Q3 FY2022 vs. Q3 FY2021 ஆனது செயல்பாடுகளிலிருந்து வரும் வருவாய் ரூ. 759 கோடியாகும். வளர்ச்சி 6.2% y-o-y மற்றும் 3.1% தொடர்வரிசை அடிப்படையில் EBIT-DA ₹114 கோடியாகும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021 இல் ₹84 கோடியாக இருந்தது. EBITDAவின் மார்ஜின் 14.9% ஆகும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021-இல் 11.6% ஆக இருந்தது. PAT ஆனது ₹78 கோடியுடன் 94% வளர்ச்சியாகும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021-இல் 40 கோடியாக இருந்தது. PAT மார்ஜின் 10.1% ஆகவும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021இல் 5.5% ஆகவும் இருந்தது.

நிதிநிலை முடிவுகள் குறித்து TCI யின் நிர்வாக இயக்குநர் வினீத் அகர்வால் கருத்து தெரிவிக்கையில் "நடப்பு நிதியாண்டின் மூன்றாவது காலாண்டு மற்றும் 9 மாதங்களுக்கான அறிக்கை ஊக்கமளிப்பதாக வும் நாட்டின் நேர்மறையான வணிக வேகத்துக்கு ஏற்பவும் உள்ளன. அனைத்து சேவை வழங்கல்களும் உயர்மட்டம் மற்றும் கிடைமட்டம் ஆகிய இரண்டிலும் சிறப்பாக செயல்பட்டன." என்றார்.

தொடரும் செமி கண்டக்டர் பற்றாக்குறை காரணமாக வாகனத் துறையில் தடைகள் இருந்தபோதிலும் பண்டிகைக் காலம் இவ்வளர்ச்சிக்கு உதவியது. மல்டி மாடல் லாஜிஸ்டிக்ஸ் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்தது. குறிப்பாக எங்களின் கோஸ்டல் ஷிப்பிங் வணிகம் அசாதாரணமாகச் செயல்படுகிறது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நேர்மறையான ESG இணக்கத்திற்கு வழிவகுப்பதற்காக GHG உமிழ்வைக் குறைப்பதை நேரடியாகக் கடைப்பிடிப்பதால் TCI ஆனது மல்டிமாடல் வணிகத்தில் முதலீடு செய்த வண்ணம் உள்ளது. தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவைக்கான தொழில்நுட்பம் கொண்ட தளத்தால் இயக்கப்படும் 3PL & கோள்டு சப்ளை செயின் சொல்லுஷன்ஸ் உடைய தேவை அதிகரித்து வருவதை நாங்கள் தொடர்ந்து காண்கிறோம்.